# ஆம்,

## நான் குடும்ப தலைமைத் திட்டத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்

என்னை தொடர்பு கொள்ள:

பெயர்: ______________________________

தொலைபேசி: ______________________________

மின்னஞ்சல்: ______________________________

என்னை தொடர்புகொள்ள நான் விரும்பும் முறை:
❑ தொலைபேசி ❑ மின்னஞ்சல்

**மளிகை அறக்கட்டளையில் உள்ள** பெட்டியில் போடவும் மூலாதாரங்களின் மையம் (முதல் தளம்) அல்லது பிரதான வரவேற்பறையில் மற்றும் நாங்கள் ஐந்து வணிக நாட்களுக்குள் உங்களை தொடர்புகொள்வோம்.


**மேலதிக தகவலுக்கு**, எங்களுடைய தொடர்பு எண்: 416-425-6220 Ext. 6337, மின்னஞ்சல்: familypartner@hollandbloorview.ca அல்லது www.hollandbloorview.ca/familyleaders என்னும் இணையதளத்திற்கு சென்று பார்க்கவும்

## கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக ஹாலந்து ப்ளூர்வியூ உடன் குடும்பங்கள் கூட்டு சேர்ந்துள்ளன:

- மருத்துவமனையின் மூலோபாயத் திட்டத்தை உருவாக்க
- மின்னணு சுகாதாரப் பதிவின் வழிமுறை பற்றி ஆலோசனை அளிக்க
- வாடிக்கையாளர்கள், குடும்பங்கள் மற்றும் சுகாதாரக் குழுக்கள் எவ்வாறு சிகிச்சை நடவடிக்கை திட்டங்களை மேம்படுத்துகின்றன என்பதை உயர்த்த
- வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்கள் எங்களது ஆராய்ச்சியில் எவ்வாறு ஈடுபடுகின்றன என்பதை வரையறுக்க
- வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்ப மையப்படுத்தப்பட்ட பராமரிப்பு ஆகியவற்றில் சர்வதேச அளவில் பயிற்றுவிக்க

## ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை பற்றி

ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையானது உடல் ஊனம், மருத்துவ சிக்கல், நோய் மற்றும் காயம் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களை ஆதரிப்பதன் மூலம் சாத்தியமுள்ள உலகத்தை உருவாக்குகிறது. ஹாலந்து ப்ளூர்வியூ என்பது டொரொன்டோ பல்கலைக் கழகத்துடன் முழுமையாக இணைக்கப்பட்ட ஒரு சிறந்த 40 கனடிய ஆராய்ச்சி மருத்துவமனை ஆகும். இது ஆண்டுதோறும் 7,500 குடும்பங்களுக்கு உதவுகின்றது. உள்நோயாளி மற்றும் வெளிநோயாளி சேவைகள் ஆகிய இரண்டையும் வழங்குகின்றது. ஹாலந்து ப்ளூர்வியூ பிரத்தியேகமான கவனிப்பினை வழங்குவதற்காக வாடிக்கையாளர்கள் மற்றும் குடும்பங்களை இணைத்து செய்லபடுவதில் அதன் நிபுணத்துவத்திற்காக புகழ்பெற்றது. அக்ரெடிடேஷன் கனடா நடத்திய இரு தொடர்ச்சியான கணக்கெடுப்பில் இதுவரை 100 சதவீதம் சாதித்த ஒரே நிறுவனம் ஹாலந்து ப்ளூர்வியூ ஆகும். மேலதிக தகவலுக்கு அல்லது நன்கொடை அளிப்பதற்கு **hollandbloorview.ca** என்னும் இணையதளத்தில் பார்க்கவும்.





**ஹாலந்து ப்ளூர்வியூ குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனை**
150 கேஇல்கோர் சாலை, டொராண்டோ, ஒண்டாரியோ M4G 1R8
தொலைபேசி: 416-425-6220 | கட்டணமில்லா இலவச அழைப்பு: 800-363-2440
தொலைநகல்: 416-425-6591 | மின்னஞ்சல்: info@hollandbloorview.ca
**hollandbloorview.ca**


[1482.18]



# குடும்ப தலைமைத் திட்டம்

**உங்கள் அனுபவத்தை பகிருங்கள், மாற்றத்தை உருவாக்குங்கள் மற்றும் மற்ற குடும்பங்களுக்கு உதவுங்கள்.**

Holland Bloorview
Kids Rehabilitation Hospital

## குடும்ப தலைமைத் திட்டத்தில் இணைவதன் மூலம் நீங்கள் ஹாலந்து ப்ளூர்வியூவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்த இயலும்.

ஈடுபடுத்திக்கொள்வதற்கு இதில் பல வழிகள் உள்ளன. உங்களுடைய ஆவல்கள் மற்றும் கால அட்டவணைக்கு பொருந்தக்கூடிய தன்னார்வலர் பங்களிப்பினை கண்டறிவதற்கு நாங்கள் உங்களோடு இணைந்து பணிபுரிவோம். நீங்கள் நேரிலும், வீட்டில் இருந்தபடியேயும் ஆராய்ச்சி மற்றும் மருத்துவமனை திட்டங்கள் ஆகிய இரண்டிலும் பங்கேற்க முடியும்.



“ நோயாளி மற்றும் குடும்ப மையம் சார்ந்த பராமரிப்பு ஆகியவற்றில் வளரும் ஒரு நிறுவனத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில் இரண்டாவதாக எதுவும் இல்லை. என் கருத்து மதிக்கப்படுகிறது மற்றும் என்னுடைய கருத்துக்கள் கேட்கப்படுகின்றது மற்றும் நான் ஒரு சக உறுப்பினராக கருதப்படுகிறேன். ”

-குடும்ப ஆலோசகர்

## ஆராய்ச்சி

### ஆராய்ச்சி ஆலோசகராக இருங்கள்

- வழிகாட்டி சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு உதவுங்கள்
- ஆராய்ச்சி திட்டங்கள் பற்றிய உங்களின் அனுபவம் மற்றும் ஆலோசனைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள்

### ஆராய்ச்சி மதிப்பாய்வாளராக இருங்கள்

- ஆராய்ச்சி திட்டங்களை மதிப்பாய்வு செய்து அது பற்றிய உங்களுடைய பின்னூட்டங்களை அளிக்கவும்
- ஆராய்ச்சி அறங்களுக்குள்ளும் மற்றும் எங்கள் ஆய்வு சாத்தியங்களுக்குள்ளும் குடும்ப கண்ணோட்டத்தை கொண்டுவாருங்கள்

### ஆராய்ச்சி தொடர்பாளராக இருங்கள்

- எங்கள் ஆராய்ச்சி பற்றி குடும்பங்களுக்கு தெரிவியுங்கள்
- ஆராய்ச்சியினை புரிந்துகொள்ள உதவுங்கள் மற்றும் தொடர்புறுத்தல் வழிகாட்டுதல்களை இணைந்து உருவாக்குங்கள்

### குடும்ப ஈடுபாட்டு குழு உறுப்பினராக இருங்கள்

- வாடிக்கையாளர் மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய ஆராய்ச்சியினை முன்னெடுத்துச் செல்லுங்கள்
- மூத்த ஆராய்ச்சி தலைவர்களுடன் மாதாந்திர கூட்டங்களில் கலந்துகொள்ளுங்கள்
- ஆராய்ச்சியில் குடும்ப ஈடுபாட்டினை எவ்வாறு மேம்படுத்துவது பற்றிய தங்களின் ஆலோசனைகளை ப்ளூர்வியூ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்குங்கள்

## மருத்துவமனை

### மருத்துவமனை ஆலோசகராக இருங்கள்

- மருத்துவமனை குழுக்களைப் பற்றிய உங்களின் அனுபவம் மற்றும் ஆலோசனைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள
- நிறுவன முடிவெடுத்தல் மற்றும் பராமரிப்பு அனுபவத்தை வடிவமைத்தல் போன்றவற்றின் ஒரு பகுதியாக இருங்கள்

### குடும்ப வழிகாட்டியாக இருங்கள்

- மற்ற குடும்பங்களுக்கு ஆதரவை வழங்குங்கள்
- குடும்ப ஆதரவு குழுற்கு இணை-அழைப்பாளராக இருங்கள்

### ஆசிரியராக இருங்கள்

- புதிய ஊழியர்களின் புத்தாக்க பயிற்சியில் உங்களுடைய அனுபவங்களை பகிருங்கள்
- மாநாடுகளில் கலந்துகொள்ளுங்கள்

### குடும்ப ஆலோசனை குழுவில் உறுப்பினராக இருங்கள்

- வாடிக்கையாளர் மற்றும் குடும்பத்தை மையப்படுத்திய கவனிப்பினை முன்னெடுத்துச் செல்லுங்கள்
- மருத்துவமனை தலைவர்களுடன் மாதாந்திர கூட்டங்களில் கலந்துகொள்ளுங்கள்
- மருத்துவமனையின் மூலோபாயத்தை தெரிவியுங்கள் மற்றும் மற்ற குடும்பங்களுக்கு உதவுவதற்கு திட்டங்களை முன்னெடுத்துச் செல்லுங்கள்

**எங்கள் குழந்தைகள் மற்றும் இளைஞர் ஆலோசனை கவுன்சில்கள் பற்றி எங்களிடம் கேட்கவும்.**

## குடும்ப தலைவர்கள் தன்னார்வப்பணியில் ஈடுபடும்போது அவர்களுக்கான நன்மைகள்:

1. இலவச வாகன நிறுத்துமிட வசதி
2. இலவச குழந்தை பராமரிப்பு (2.5 வயதுடைய மற்றும் அதற்கும்மேல் வயதுள்ள குழந்தைகள்) தளத்தில் உள்ள றொனால்ட் மெக்டொனால்ட் விளையாட்டுஅறையில்
3. தடையற்ற தொடர்ச்சியான ஆதரவு மற்றும் பயிற்சி
4. மருத்துவமனை சிறப்பு நிகழ்வுகள், பட்டறைகள் மற்றும் விளக்கக்காட்சிகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்புகள்
5. பிற ஹாலந்து ப்ளூர்வியூ குடும்பங்களுடன் பிணைவதற்கான வாய்ப்புகள்

## இதில் பங்குபெறுவதற்கு, அனைத்து குடும்ப தலைவர்களும்:

1. **மருத்துவமனை திட்டங்கள்:** ஹாலந்து ப்ளூர்வியூவின் வாடிக்கையாளராக அல்லது வாடிக்கையாளர்களின் குடும்ப உறுப்பினராக இருக்க வேண்டும் (தற்போதைய அல்லது கடந்தகாலத்தில்)
   **ஆராய்ச்சி திட்டங்களில்:** ஹாலந்து ப்ளூர்வியூவின் வாடிக்கையாளராக, வாடிக்கையாளர்களின் குடும்ப உறுப்பினராக அல்லது ப்ளூர்வியூ ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சி பங்கேற்பாளராக இருக்க வேண்டும்
2. மற்றவர்களுடன் நன்றாக வேலை செய்ய வேண்டும், பன்முகத்தன்மை மற்றும் மாறுபட்ட கருத்துக்களை மதிப்பவராக இருத்தல் வேண்டும்
3. ஊழியர்கள் மற்றும் பிற குடும்பங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் இணைந்து செயல்படுவதில் ஆர்வமாக இருக்கவும்
4. மற்றவர்களின் கருத்துக்களை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளுங்கள்
5. தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மையினை மதியுங்கள்